# இணைய பல்கலைக்கழகமூலம் தமிழ் கற்பித்தல்
# Teaching Methodology in Tamil Inaiya Virtual University

டாக்டர் இரா. பக்கிரிசாமி
பிளாட் 2219, எ.எப். பிளாக், சென்னை/40, தமிழ்நாடு

---

தமிழ் இணைய பல்கலைக்கழகத்தை, நம் தமிழிக முதல்வர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். இது உலகளவில் வாழும் தமிழ் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்று சொன்னால் மிகையாகாது.

இப்பல்கலைக்கழகம் எவ்வாறு செயல்பட வேண்டுமென எண்ணமிட்டிருப்பார்கள். திட்டமிட்டிருப்பார்கள். இருப்பினும் தமிழ் மக்கள் என்ன எதிர் பார்க்கிறார்கள். முக்கியமாக உலகத்தில் பல நாடுகளில் வசிக்கும் தமிழை மறக்கும் நிலையில் உள்ள தமிழர்களுக்கு நாம் எவ்வாறு தமிழை கற்பிக்கவேண்டுமென நாம் சிறித சிந்திப்போம். அந்த சிந்தனையோடு இக்கட்டுரையை உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

நம் தமிழ்மொழி தொன்மை வாய்ந்தது. வளம் குன்றாதது. பல இடுக்கண் வந்தபோதும் நிலைத்து நின்று தனித்தன்மையோடு விளங்குகிறது. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம், யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர் போல் இளங்கோவைப் போல் யாங்கணும் பிறந்ததில்லை என்று பெருமை கொள்வதில் பயன் இல்லை.

உலகத்தில் ஏற்படுகின்ற மாற்றத்திற்கு ஏற்ப நாம் தமிழை வளமை படுத்தி இருக்கிறோமா? என்ற கேள்வி நம்முன்னே இன்று எழுந்தது அல்லவா? அதற்கு ஒரு விடை காணவே இவ்வாறான தமிழ் இணைய பல்கலைக்கழகம் காலத்தின் கட்டாயத்தின் காரணமாகவே தொடங்கப் பட்டுள்ளது என யாவரும் அறிவோம்.

உலகத்தில் பல நாடுகளில்வாழும் தமிழர்களுக்கென பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்களின் துணைகொண்ட இப்பல்கலைக்கழகம் ஆக்கப்பட்டது. திரைகடலோடியும் திரவியம் தேடு என்பது தமிழர்களிடையே இருக்கும் ஒரு பழமொழி. அதன் காரணமாகவே நம் தமிழர் பலர் வெளிநாடுகளுக்கு சென்றனர்.

தமிழகத்தில் வாழும் தமிழர்கள் 6.5 கோடி என புள்ளிவிபரம் கூறுகிறது. உலகளவில் பல நாடுகளில் வாழும் தமிழர்களையும் கணக்கெடுத்தால் ஏறக்குறைய 8.5 கோடி என புள்ளி விபரம் கூறுகிறது.

உலகில் பல நாடுகளில் வாழும் தமிழர்களை 3 பிரிவாக பிரிக்கலாம்.

(1) திரவியம் தேட 200, 300 ஆண்டுகளுக்கு முன் வெளிநாடு சென்றவர்கள். அத்தகைய தமிழர்கள் முழுமையாக தமிழை மறந்திருக்கலாம். தமிழின் ஒலியை முழுமையாக மறக்கவில்லை. தென் ஆப்பிரிக்கா மக்களை சொல்லலாம். அப்படிப்பட்டவர்களுக்கு ஒலி வழியாக பாடம் கற்பிக்க வேண்டும்.

அப்பா, அம்மா, ஆடு, மாடு என ஒலித்து, படம் காட்டி சொல்லித்தர வேண்டும். இது மிகவும்

சிரமமான வேலை. இருப்பினும் நிச்சையமாக இவ்வாறாக ஒலி வழியாக கற்பித்தால் கால தாமதமானாலும் வெற்றி பெறமுடியும். கணினியில் பலவகையான புதுமைகளை செய்துவரும் நாம் இவ்வழியை பின்பற்றினால் தமிழை மறந்துள்ள தமிழர்களுக்கு ஓரளவுக்கு மெல்ல மெல்ல ஆனாலும் செம்மையாக தமிழை கற்றுத்தர இயலும். ஒலிக்கு ஏற்ப எழுத்தைக் காட்டி சொல்லித்தருவது தான் சிறந்தது என நான் கருதுகிறேன்.

(2) 100, 150 ஆண்டுகளுக்கு முன் வெளிநாடு சென்றவர்கள். தமிழில் பேசுவார்கள். தமிழ் வார்த்தைகள் சிலவற்றை தெரிந்திருப்பார்கள். சில வார்த்தைகளை படிக்கவும் செய்வார்காள். உதாரணமாக மோரீஷிய நாட்டில் வாழும் மக்கள் இந்த நிலையில்தான் உள்ளார்கள். அடுத்த நிலையாக சிறு சிறு வாக்கியங்களை எழுதி ஒலித்துக்காட்டி சொல்லிதர வேண்டும்.

ஆத்திசூடி - அறஞ்செயவிரும்பு, ஆறுவது சினம் என ஆரம்பித்து, சிறு சிறு வாக்கியங்கள் சொல்லித்தரலாம். வாருங்கள், உட்காருங்கள், வணக்கம், நலமா, போய்வாருங்கள் என பேச்சு வார்த்தைகளை சொல்லிதந்து பிறகு பெரிய வாக்கியங்கள் சொல்லிதரலாம். சினிமா பாடல்களை ஒலித்துகாட்டி பல சொற்களை கற்று தரவேண்டும். அடுத்த நிலையாக பஞ்சதந்திர கதைகள், விக்கிரமாதித்தன் பெரிய எழுத்து கதைகள் முதலியவைகளை எழுதி ஒலித்து சொல்லிதர வேண்டும். ஒலித்து ஒலித்து என நான் மீண்டும் மீண்டும் சொல்வது காதால் கேட்டால்தான் அவர்கள் உள்ளத்தில் பதியும். அந்த காலகட்டத்தில் நம்நாட்டு 8-ம் வகுப்பு தேர்வுபோல் வைத்து பட்டையம் வழங்கலாம்.

(3) சமீபத்தில் வெளிநாடு சென்றவர்களுக்கு. 50, 60 ஆண்டுகளுக்கு முன் வெளிநாடு சென்றவர்கள் தமிழில் பேசுவார்கள். எழுதுவார்கள். படிக்கவும் செய்வார்கள். ஆனால் தமிழை மறந்து வருகிறார்கள். அவர்கள் தமிழை மறந்து விடக்கூடாது என நாம் முயற்சி செய்திடல் வேண்டும். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு போன்ற நாடுகளில் வாழும் ஜனங்கள் இவர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு முதலில் தமிழ் பத்திரிகைள் படிக்க சொல்லித் தரலாம். அடுத்த படியாக சிறு சிறு கதைகள் படிக்க ஒலித்துக்காட்டி படிக்கசெய்ய வேண்டும். திருக்குறள், டாக்டர் மு.வ. கதைகள் படித்து, காட்டி சொல்லித்தர வேண்டும். இந்த நிலை படித்தவர்களுக்கு பி.ஏ. போன்ற பட்டம் வழங்கலாம்.

எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் தற்போது தயவுசெய்து இலக்கணம் கற்றுதர வேண்டாம். வேண்டுமானால் மேற்கொண்டு அவர்களாகவே படித்து புலவராகலாம். ஆராய்ச்சியாள-ராகலாம். அதற்கும் வழி செய்து தரலாம்.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழை நன்கு கற்றவர்கள். இலக்கிய படைப்பாளிகள். கவிஞர்கள். அவர்களுக்கும் சேவை செய்ய இவ்விணைய பல்கலைக்கழகம் தயாராக இருக்க வேண்டும்? அவர்கள் வேண்டின் இலக்கிய நூல்களை, சங்க இலக்கியங்களை ஐம்பெரும் காப்பியங்களை சமய நூல்களை இணையத்தில் இணைத்து வழங்கவேண்டும். அவ்வாறே இலங்கையில் வாழ்ந்த பெரும் புலவர்கள் அருள்மிகு விபுலானந்த அடிகளாரின் யாழ் ஆராய்ச்சிநூல், திருமிகு ஆருமுக நாவலர் எழுதிய நூல்களையும் இணையத்தில் இணைத்து வழங்கலாம். அந்த நூல்கள் நம் போன்றோருக்கு பயன்தரும். Chat - நேரடி பேச்சு மூலம் ஒருகுறிப்பிட்ட நேரத்தில் அவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை தீர்த்து வைக்கவேண்டும்.

நம் எண்ணம், குறிக்கோள் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் தமிழை மறக்ககூடாது என்பதுதான். அந்த குறிக்கோளை தமிழ் இணைய பல்கலைக்கழகம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கை நமக்கு பிறந்துள்ளது.